முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்

**O.S No.801/2018**

**Witness PW 2**

பெயர்: ராமு

க/பெ.: தண்டபாணி

இன்று (18/03/2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை

என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சொத்து கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தின் புல எண், விஸ்தீரணம், சர்வே எண் தெரியாது. 16 இன சொத்துகள் பொறுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்திற்கான வில்லங்க சான்றுகளை வழக்கிற்கு முந்தைய நிலையில் எடுத்து தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்துகளை பொறுத்து எனது தந்தை வனத்தையன் என்ற ஆசிரியரிடம் அடமானம் வைத்தார் என்றால் சரிதான், ஆனால் அந்த பணத்தை பொது குடும்ப நலனுக்காக செலவழிக்கவில்லை. வழக்கில் பொது குடும்ப கடன்கள் ஏதும் இல்லை என்று சொல்லியுள்ளேன். என் தந்தை மீது வனத்தையன் என்பவர் அடமான கடன் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கு விழுப்புரம் கூடுதல் 2வது சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு எனது தந்தை பணம் செலுத்த வேண்டும் என தீர்ப்பாகிவிட்டது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கில் எங்களுக்கு நாங்கள் எனது தந்தையின் வாரிசுகள் என்ற வகையில் அறிவிப்பு இறுதிநிலை தீர்ப்பாணை மனு மீது சார்வு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வில்லங்க சான்றிதழ்களை நான் தாக்கல் செய்திருந்தால் வழக்கு சொத்து பொறுத்தான எனது தந்தையின் அடமான கடன் விவரங்கள் தெரியவந்திருக்கும் என்றால் சரியல்ல. பொது குடும்ப வருமானத்திலிருந்து சிறுவாக்கூர் கிராமத்தில் 1 ஏக்கர் நிலம் எனது பெயரில் எனது தந்தையார் வாங்கி தரப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி சொத்தை நான் தற்போதும் நெல் பயிரிட்டு அனுபவம் செய்துவருகிறேன்

என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி பெயரில் பொது குடும்ப வருமானத்திலிருந்து 15 செண்ட் சொத்து மற்றும் 4வது பிரதிவாதி கற்பகம் பெயரில் 19 செண்ட் சொத்து எனது தந்தையால் வாங்கி கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி பஞ்சாட்சரம் பெயரில் எனது தந்தை குடும்ப வருமானத்திலிருந்து சொத்து எதுவும் வாங்கிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எவ்வளவு சொத்து எந்த தேதியில் அவ்வாறு கொடுக்கப்பட்டது போன்ற விவரங்கள் எனக்கு தெரியாது. 5ம் பிரதிவாதி லட்சுமணன் எனது தம்பி. 5ம் பிரதிவாதி எனது தந்தையிடமிருந்து சொத்தை ஏமாற்றி எழுதி வாங்கிக்கொண்டார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. பொது குடும்ப கடனை செலுத்திவிட்டு சொத்தில் உள்ள எனது பங்கை பெற்றுக்கொள்ளலாம் என்றால் கடன் எதுவும் நாங்கள் வாங்கவில்லை. வழக்கில் கடன் இல்லை என்று பொய் சொல்லி தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடிக்கு உகந்தது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

(Sd/-C.R.Gowthaman)
Principal Subordinate Judge,
Villupuram.